(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC. NO.71/2018

**Depostitions of PW- 7 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பார்த்திபன் | Caste | |
| Father's name | ஜெயராஜ் | Calling | மெக்கானிக் |
| Village | எம். கல்லுப்பட்டி | Religion | |
| Taluk | இராஜபாளையம் | Age. | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of May- 2024.

Signature of Witness.

23.05.2024

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை–

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பூவாணி விலக்கில் உள்ள ASN கம்பெனியில் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். (**பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. ்நான் ஒரு நாள் எனது கம்பெனியில் பணியில் இருந்துபோது போலீசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், போட்டுக்கொடுத்தேன். நான் எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சியை திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய தலைமை காவலர் எண்.2294 திரு.கே. பொன் மகேஷ்குமார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்,**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2. கடந்த 29.03.2017 ம் தேதி பகல் 12.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற எண். 232/2017 வழக்கில் சம்பவ இடத்தினை என் முன்னிலையிலும், பெருமாள் என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்தார் என்று சொன்னால் சரியல்ல. வரைபடம் வரைந்து ஒரு பார்வை மகசர் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகசரில் நானும், பெருமாளும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.